**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 4,786,065 தொகையான கடன்கொடுத்தோராக 72 ஆம் நாட்குறிப்பின் மூலம் பதிவழித்ததன் காரணமாக அப்பெறுமதி கடன்கொடுத்தோர் குறைத்தும் திரண்ட நிதி கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 71 ஆம் நாட்குறிப்பின் மூலம் முறையான அங்கீகாரமின்றி வருமானக் கடன்பட்டோர் ரூபா 4,406,666 ஆல் பதிவழித்த காரணத்தினால் அப்பெறுமதி கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதி குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 7,455,000 பெறுமதியான 003 நிலையான வைப்புக் களுக்காக துானாகவே முதலீட்டுப் பெறுமதி சேர்க்கப்படுகினற் ரூபா 278,317 தொகையான வட்டித் தொகை முன்னைய ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்கும்உரிய முதலீட்டு வருமானமாக ஒதுக்கீடு சய்யாமல் மீளாய்வாண்டின் வருமானம் மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) வழங்கல் கடன்கொடுத்தோர், நானாவித கடன்கொடுத்தோர், செலுத்தப்படாத சம்பளம் மற்றும் வேதனங்கள மற்றம் நிர்மாணக் கடன்கொடுத்தோர் என்பன ஒரு பேரேட்டுக் கணக்கின் மூலம் நானாவித கடன்கொடுத்தோராகஇனங்காணப்பட்ட காரணத்தினால் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒவ்வொரு கணக்கிற்குரிய மீதிகள் வெவ்வேறாக இனங்காண முடியாதிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான இறுதியில் 02 பேரேட்டுக் கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட மீதி மற்றும் அதற்குரிய பதிவேடுகளின் மீதிகளுக்கிடையே ரூபா 472,803 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 69,296,920 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 42,039,689 ஆன மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. ரூபா 291,678 ஆன 03 மீதிகள் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதியில் செலுத்த வேண்டிய ரூபா 61,351,950 அதில் ரூபா 16,477,660 ஆன மீதிகளுக்காக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன், ரூபா 1,860,476 ஆன மீதிகள் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டின் ரூபா 4,786,065 ஆன கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 4,406,665 ஆன ஊழியர் கடன்பட்டோர் மீதிகளை பதவழிப்பதற்கு முன்னர் பெற்றுக்கொண்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவு அடிப்படையில் மேற்கெள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப்பிரதேசத்தில் வீத வரி மற்றும் வரி செலுத்தாமல் தவிர்ப்புச் செய்யும் நபர்களுக்குரிய ஆதனங்களை தடைசெய்து நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,813,832 ஆக காணப்பட்டதுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,452,554 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 6,361,278 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இச்செயற்பாட்டு நிதி விளைவிற்கு ரூபா 30,559,786 தொகையான மூலதன உதவி மற்றும் ரூபா 63,634,497 ஆன மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 3,260,879 ஆன பற்றாக்குறையொன்றாக மாறியுள்ளது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வருமானம் | | | | செலவினம் | | |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் (10,20,30,40) | 59,103 | 52,215 | 6,888 | தனிப்பட்ட வேதனம் | 56,398 | 44,303 | 12,095 |
| (ii) | ஏனையவை (50,60,70 | 68,117 | 57,034 | 11,083 | ஏனையவை | 41,008 | 41,493 | (485) |
| | உப மொத்தம் | 127,220 | 109,249 | 17,971 | உப மொத்தம் | 97,406 | 85,796 | 11,610 |
| (iii) | மூலதன வருமானம் | 30,560 | 58,291 | (27,731) | மூலதன செலவினம் | 63,635 | 82,570 | (18,935) |
| | மொத்தம் | 157,780 | 167,540 | (9,760) | மொத்தம் | 161,041 | 168,366 | 7,325 |
| | செயற்பாட்டு விளைவு | 29,814 | 23,453 | 5,640 | மிகை / பற்றாக்குறை | (3,261) | (826) | 2,435 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 127,219,571 தொகையில் அண்ணளவாக 54 சதவீதம் ரூபா 68,116,715 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 30,559,786 ஆன மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை உள்ளடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 97,405,740 தொகையில் அண்ணளவாக 58 சதவீதம் ரூபா 56,397,592 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் அண்ணளவாக 53 சதவீதம் ரூபா 51,956,149 ஆன சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டு ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவு ஆகிய ரூபா 63,634,497 தொகையில் அண்ணளவாக 46 சதவீதம் ரூபா 29,373,085 தொகை நிலையான சொத்துக்களை கையேற்பதற்கும் எஞ்சிய 54 சதவீதமான ரூபா 34,261,412 தொகை மாகாண திட்டவட்டமான, மாகாண முதலீடு, பிரதேச சபைகளைப் பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களாகும்.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப் பட்டது | 2014 உள்ளவா றான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 2,012 | 2,129 | 1,338* | 2,007 | 2,194 | 1,450 |
| (ii) குத்தகை வாடகை | 22,261 | 23,608 | 1,008 | 53,586 | 29,473 | - |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,161 | 2,231 | - | 2,106 | 1,953 | 756 |
| (iv) ஏனைய வருமானம் | 103,180 | 99,252 | 46,509 | 69,767 | 75,630 | 38,567 |
| | 129,614 | 127,220 | 48,855 | 127,466 | 109,250 | 40,773 |

(அ) வீத வரி மற்றும் வரியின் கீழ் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,012,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், வருடாந்த பட்டியலிடல் ரூபா 2,129,000 ஆக இருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,337,571 ஆன நிலுவையாக இருந்ததுடன், 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவை மீதியிலிருந்து ரூபா 446,388 ஆன தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) குத்தகை வாடகையின் கீழ் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 22,261,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், வருடாந்த பட்டியலிடல் ரூபா 23,608,044 ஆக இருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,007,697 ஆன நிலுவையாக இருந்ததுடன், 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவை மீதியிலிருந்து ரூபா 769,646 ஆன தொகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | வருமான சேகரிப்பு பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | நிலுவை மீதி பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி (10) | 1,378 | 2,129 | 3,507 | 598 | 1,734 | 2,332 | 780 | 395 | 1,175 |
| வாடகை (20) | 835 | 23,608 | 24,443 | 428 | 23,007 | 23,435 | 407 | 601 | 1,008 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் (30) | - | 2,230 | 2,230 | - | 2,230 | 2,230 | - | - | - |
| ஏனைய வருமானம் (40,50,60,70) | 38,760 | 99,252 | 138,012 | 17,147 | 83,784 | 100,931 | 21,613 | 15,468 | 37,081 |
| மொத்தம் | 40,973 | 127,219 | 168,192 | 18,173 | 110,755 | 128,928 | 22,800 | 16,464 | 39,264 |

சபையின் வருமான பதிவேடுகளை பராமரித்துச் செல்வதில் குறைபாடுகள் காரணமாக கணிப்பிடலின் பிரகாரம் 2015 சனவரி 01 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை மீதிகள் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் மீதிகளுடன் இணங்கவில்லை.

### 2.3.3 ஆதனவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) புதிய நிர்மாணங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிர்மாணத் திட்டங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் இணக்கச் சான்றிதழ் வழங்கி வீதவரியினை திருத்தம் செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2012 ஆம் ஆண்டின் போது புதிய மதிப்பீடொன்று மேற்கொண்ட காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 49 கட்டிடங்கள் மற்றும் வீடுகளுக்காக 2015 ஆம் ஆண்டு வரை அந்த ஆதனங்கள் உரிமையாளர்களுக்கு ரூபா 500 படி வருடாந்த பெறுமதிக்கு ரூபா 25 மாத்திரம் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. இதன் காரணமாக சபைக்கு பாரியளவு வீதவரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஹெட்டிபொல நகரில் பஸ் நிலையத்திற்கு முன்னால் அமைந்துள்ள 117/A, 119, 119/2, 119(A) வகையான 694 சதுர மீற்றர் அளவிலான 4 மாடிகளுடன் கூடிய கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபை உத்தியோகத்தர்களால் இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து புதிய கட்டிடம் மதிப்பீடு செய்யப்பட்டு வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 153 ஆம் இலக்க வீத வரி மக்கள் வங்கி கட்டிடம் 2014 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், வீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை வங்கி கட்டிடத்திற்காக ரூபா 12,150 ஆக வீத வரி வருமானம் வருடாந்தம் அறவிடப்பட்டு வந்ததுடன் இக் கட்டிடத்தின் மூலமும் அதற்கு சமமான வருமானத்தை உழைக்க முடியுமாக இருந்தது.

**2.3.2 வாடகை**

---------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்குரிய சபையின் சொத்துக்கள் மற்றும் ஆதனங்களின் உரித்தினை குத்தகைக்கு வழங்குவதன் கீழ் குறைந்த கேள்வி ரூபா 37,026 ஆன இரண்டு சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்காகவும் குறைந்த கேள்வி ரூபா 455,626 ஆன 12 ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்காகவும் 04 தடவை விலைகோரல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குத்தகையாளர் முன்வராததன் பேரில் குத்தகைக்கு வழங்க முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செப்தம்பர் வரை பட்டியலிடப்பட்டிருந்த கிரிமட்டியாவ சந்தியில் மீன் கூடத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 27,090 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் மேலும் ரூபா 10,043 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது மாவிஅல வாரச்சந்தை கோழி இறைச்சிக் கடைக்காக ரூபா 49,500 பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், அப்பண்ததை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2007 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைக்கு வழங்கப்பட்ட மடிகே அனுக்கனே இறைச்சிக் கடைக்காக ரூபா 60,300 தொகையும் ஹெட்டிபொல கோழி இறைச்சிக் கடைக்காக ரூபா 23,707 தொகையுமாக மொத்தம் ரூபா 84,007 ஆன நிலுவை தொகை திசெம்பர் 31 ஆந் திகதி காணப்பட்ட போதிலும், 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 51,776 தொகை நிலுவையாக காணப்பட்டது.

(உ) ஹெட்டிபொல பஸ் நிலைய கடைகள் கேள்வி கோரி முற்கொடுப்பனவு முறைமையில் வழங்கும் போது இரண்டு முறை கேள்வி கோரப்பட்ட போதிலும், ஆகக்குறைந்த விலை ரூபா 16,225,000 தொகையான 07 கடைகள் கணக்காய்வு சந்தர்ப்பமான 2015 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையிலும் வழங்குவதற்கு முடியாதிருந்தது.

2014 ஆம் ஆண்டிற்குரிய கடைகள் முன்கொடுப்பனவு முறைமையில் வழங்கும் போது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்ததன் பின்னர் 14 நாட்களுக்குள் முற்கொடுப்பனவு தொகை செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2014 மார்ச் 06 ஆந் திகதி கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்த போதிலும், 11 சொத்துக்களுக்காக ரூபா 16,435,465 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக காணப்பட்டது.

(ஊ) 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளக்கு ஒருமுறை கடை வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும், சபையின் விஜய உதாகம வியாபார கடைத்தொகுதி, கம்புராபொல வியாபார கடைத்தொகுதி, ஹெட்டிபொல B,C மற்றும் D வர்த்தக கடை தொகுதி என்பவற்றின் வாடகை 14 முதல் 27 வருடங்கள் வரையான காலமாக திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 10 கடைகளுடன்கூடிய ஹெட்டிபொல பல்நோக்கு கட்டிடத்தின் 01 மற்றும் 02 ஆம் இலக்க கடைகள் ஹெட்டிபொல இலங்கை வங்கிக் கிளைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் அமுலாகும் வரையில் 2015 மே 14 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட கத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட வாடகை ஒவ்வொரு மாதத்தினதும் முதலாம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய போதிலும், குறித்த குத்தகையை செலுத்துவது தாமதிக்கப்பட்டிருந்தது. சபையினால் கடை வாடகை தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட ஏனைய உடன்படிக்கைகளில் தண்டப்பணம் தொடர்பாக

நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இந்த உடன்படிக்கையில் அவ்வாறான நிபந்தனை உள்ளடக்கப்படாததன் பேரில் சபைக்கு அத்தண்டப்பணத்தை அறவிட முடியாதிருந்தது.

(ஏ) ரூபா 1,225,950 ஆகக் குறைந்த தொகையான ஹெட்டிபொல ஒன்றிணைந்த இறைச்சிக்கடை 2015 ஆம் ஆண்டிற்காக இரண்டு மறை கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு கொள்வனவாளரும் முன்வராமையால் 2015 சனவரி 20 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாரினால் (வடமேல்) கேள்வி பெறுமதியில் 10 சதவீதம் கழித்து மீண்டும் கேள்வி கோருவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன்2014 ஆம் ஆண்டில் குத்தகையாளரின் வேண்டுகோளின் பேரில் 2015 சனவரி முதல் 2015 யூலை 2014 விலையை அடிப்படையாகக் கொண்டு உடன்படிக்கையொன்று இல்லாமல் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. எனினும் 2015 யூலை மாதததின் தவணையை செலுத்தப்படாததன் பேரில் ரூபா 92,884 வாடகையும் அதற்குரிய தண்டப்பணத் தொகையையும் அறவிடுவதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

**2.3.5 ஏனைய வருமானம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 910,286 ஆன நிலுவை நீர்க்கட்டணமொன்று காணப்பட்டது. அதில் ரூபா 492,948 முன்னைய ஆண்டிற்குரிய நிலுவையானதாக இருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவை ரூபா 90,462 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அதில் உள்ள ரூபா 77,331 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவையாக இருந்தது.

(இ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக கட்டிட விண்ணப்ப பதிவேட்டில் 22 கோபுரங்களுக்குரிய விண்ணப்பங்கள் கோவை செய்யப்பட்டிருந்தன.

**2.3.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத் தொகை ரூபா 5,824,151 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 25.312,646 தொகை காணப்பட்டன.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

03 ஏக்கர் 01 ரூட் மற்றும் 20 பேர்ச் அளவிலான கெபெல்லவெலவில் அமைந்துள்ள கெபெல்லவெல ஹேனயாய மற்றும் மீகஹமுல ஹேன காணி சபையின் அங்கீகாரமின்றி 2015 ஏப்ரல் 22 ஆந் திகதி ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டதன் பின்னர் 2015 மே 11 ஆந் திகதி பிரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**3.2 செயற்பாட்டு திறமையின்மை**

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 643,652 செலவிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட கொங்கிரீட் அச்சுக்கல் செயற்திட்டம் செயற்படுத்தப்படாமையால் 2015 ஆம் ஆண்டின் போது சபையினால் 712,500 அச்சுக்கள் அளவில் கொள்வனவு செய்யப்பட்டு 80 வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் மாவிஅல வாரச்சந்தை முறையாக ஒதுக்கப்பட்ட 45 வியாபார கூடங்களையும் திறந்த பிரதேசம் உட்பட 150 வியாபாரிகள் அளவிலான இயலளவு காணப்பட்ட போதிலும், வியாபாரிகளின் சராசரி வருகை 20 இற்கும் 25 இற்கும் இடைப்பட்ட அளவிலும் வருமானம் ரூபா 3,000 தொடக்கம் ரூபா 7,000 இற்கு இடைப்பட்டதாக இருந்தது.

(இ) மல்வானேகெதர வாரச்சந்தையில் முறையாக ஒதுக்கப்பட்ட 96 வியாபார கூடங்களுடன் திறந்த பிரதேசத்தையும் கருத்திற்கொண்டு 130 வியாபாரிகளுக்கு இயலளவு காணப்பட்ட போதிலும், தென் பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ள 300 சதுர அடி ஆன 12 வியாபார கூடங்கள் நுகர்வோர் நுழைவாயில் ஒடுங்கியதன் காரணமாக எந்தவொரு வியாபாரியும் சந்தை திறக்கப்பட்ட திகதி முதல் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கு தீர்வொன்றாக 2015 ஏப்ரல் அளவில் ரூபா 7,800 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டு கேட் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கஙடகளட நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.3**

**ஒப்பந்த நிர்வாகம்**

2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,0013,639 ஆன மாகாண திட்டவட்டமான நிதிஏற்பாட்டின் பேரில் தொஹுமுனவத்த இரண்டாவது ஒழுங்கை அபிவிருத்தி செய்யம் ' ஆம் கட்டம் அச்சுக்கள் பிடிக்கும் போது வீதியின் மேற்றளம் ABC கலவையில் பரப்பி 8-10 தொன் அளவிலான ரோலரினால் பதப்படுத்தி மதிப்பீட்டுத் தொகையில் ரூபா 158,827 அதாவது 15 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் எஞ்சிய பகுதி அதாவது இரண்டாவது கட்டத்திற்கு ரூபா 500,000 ஆன மதிப்பீடு தயாரிக்கம் போது ABC கலவை பரப்பி 8-10 ரோலரினால் பதப்படுத்தாமல் வீதியன் மேற்றளத்தில் அச்சுக்கல் ஒட்டுதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**4.3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

கொங்கிரீட் அச்சுகள் உற்பத்தி செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 643,652 செலவு செய்து ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 399,800 ஆன சொத்துக்கள் 04 ஆண்டு காலமாகவும் ரூபா 44,149 ஆன அச்சுக்கள் பதப்படுத்தும் தாங்கி 01 வருடங்களுக்கு அண்மித்த காலமாகவும் ரூபா 199,703 தொகையான் அச்சுக்கள் பிரிவு ஓராண்டு காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டன.

05. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்த நிருவாகம்

(இ) காணிகளைப் பிரித்தல்

(ஈ) வருமான நிர்வாகம்